# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 49 — 1973 මාර්තු 02 වැනි සිකුරාදා — 1973.03.02

49 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 02 ந் திகதி வெள்ளிக்கிழமை


## பகுதி I : தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[வெவ்வேறு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் | 205 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 211 |


கவனிக்க.—இரத்தினக்கல் (மன்னிப்பு) சட்டமூலம் 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ந் திகதிய ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறை நிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## பதவிகள் — வெற்றிடம்

**" ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "**

1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. சேவைக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகளை, அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலத்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச்சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விகிதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விகிதத்தையோ அதோடு மேலும் 5 சத விகிதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத விகிதத்தை ஒவ்வொரு திங்களின்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அரசசேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்கள் என்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தாப் பத்திரத்தேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. பொ. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

---

### முக்கிய அறிவித்தல்

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அச்சுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

குறிப்பு.—சிங்கள மொழி மூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றேவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

## திருகோணமலை மாவட்டம், திருகோணமலை பட்டணமும் சூழலும், கட்டுக்குளம்பற்று மேற்கு, கொட்டியாபுரம்பற்று பிரிவுகளுக்கான வேதனமற்ற பிஸ்கால் உத்தியோகத்தர் பதவிகளுக்கான விண்ணப்பங் கோரும் அறிவித்தல்

மேற்படி பிரிவுகளுக்கான வேதனமற்ற பிஸ்கால் உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக கீழ்காணும் தகைமைகளுக்கு அமைந்த பெயர் வழிகளிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இந் நியமனம் பகுதிநேர அடிப்படையிலானதாகும். நியமனம் செய்யப்படுவர் தற்காலிக, நிரந்தர நியமனமோ சேமலாப நிதி, இளைப்பாற்றுச் சம்பளம், நன்கொடை முதலானவை கோருவதற்கோ அருகதையற்றவராவர்.

3. அன்றாட செலவினங்களுக்காக மாதாந்தம் ரூ 50/- வழங்கப்படும்.

4. ஏலவிற்பனைகளின் பொருட்டு கீழ்காணும் கட்டணங்கள் வழங்கப்படும் :—

(1) அசைவற்ற ஆதனமாயின் 2 சதவீதம்—ஆகக்கூடிய கட்டணம் ரூ. 100/-

(2) அசைவுள்ள ஆதனமாயின் 3 சதவீதம் ஆகக்கூடிய கட்டணம் ரூ. 150/-

5. தகைமைகள்.—

(1) 1.4.1973 ஆம் திகதியன்று வயது 25 க்குக் குறையாமலும் 40 க்குக் கூடாமலுமிருக்க வேண்டும்.

(2) கல்வித் தராதரம் 8 ம் வகுப்பு அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சையில் சித்தியெய்தியிருக்கவேண்டும். இப்பிரதேசத்திற்குரிய மொழியில் கருமமாற்றுவதற்கேற்ற அறிவு உண்டென்றும் உறுதிப்படுத்தவேண்டும்.

(3) ரூ. 5,000/- த்திற்குக் குறையாத பெறுமதி வாய்ந்த ஆதனம் அல்லது ரொக்கம் ரூ. 2,500/- பிணையாக கொடுக்கத் தக்கவராயிருத்தல் வேண்டும்.

(4) சிறந்த ஒழுக்கமும், இப்பகுதியில் கணிசமான நிலைபரமும் தகுந்த தேகக்கட்டும் உடையவராயிருத்தல் வேண்டும். இப்பகுதியில் தகுந்த நிலைபரம் உள்ளவரெனப் பிரிவுக் காரியாதிகாரியிடமிருந்து விசேட சான்றிதழ் ஒன்று சமர்ப்பிக்கவேண்டும்.

(5) விண்ணப்பிக்கும் பிரிவுக்கான பகுதியில் நிரந்தர வாசியாயிருத்தல்.

6. விண்ணப்பங்கள், இவ்வறிவித்தலின் முடிவிற் காட்டப்பட்டுள்ள படிவத்திற்கமைய அரை பூள்ஸ்கெப் கடதாசியில் தயாரிக்கவேண்டும். விண்ணப்பங்கள் "பிரதி பிஸ்கால்" திருகோணமலை, என விலாசமிட்டு பதிவுத்தபாலில் 1973 ம் ஆண்டு மார்ச் (பங்குனி) மாதம் 24 ம் திகதி அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கும்படி அனுப்புதல் வேண்டும்.

7. இப்பதவிக்குரிய கடமைகள்.—

(அ) ரூ. 5,000/- த்திற்கு கூடுதலாக ஆதனங்களை ஏலத்தில் விற்பனை செய்தல்.

(ஆ) (1) பிஸ்கால் வெளியாத்துக்களுக்குரிய பணத்தொகைகள் அறவிடுதல்.

(2) பிஸ்கால் வெளியாத்துக்களுக்குரிய ஆதனங்களின் உரிமை பொறுப்பு கொடுத்தல்.

(3) சிவில் விருந்துகளை நிறைவேற்றுதல்.

(4) கஷ்ட நிவாரண கட்டளைகளை (Distress Warrants) நிறைவேற்றுதல்.

(5) பிஸ்கால் அல்லது பிரதி பிஸ்காலினால் பிறப்பிக்கப்படும் உத்தரவுப்பத்திரத்தின் பிரகாரம் தேசிய அபிவிருத்தி வரி, ஸ்தாபனங்களின் பதிவு இரத்துச் செய்வதில் பெறப்படும் பணம் ஆகியவற்றை அறவிடுதல்.

(6) உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் அத்தாட்சிப் பத்திரங்களை நிறைவேற்றுதல்.

வை. நீலகண்டன்,
திருகோணமலை பிரதி பிஸ்காலுக்காக.

பிரதி பிஸ்கால் காரியாலயம்,
திருகோணமலை.
1973-2-20.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

திருகோணமலை மாவட்டம்.............. பிரிவிற்கான வேதனமற்ற பிஸ்கால் உத்தியோகத்தர் பதவி

1. முழுப் பெயர் (குடும்பப் பெயருடன்)————.
2. நிரந்தர விலாசம் :————.
3. பிறந்த திகதி :————.
   (பிறப்பு சாட்சிப் பத்திரத்தின் முழுப்பிரதி அணைக்கவும்)
   ————. ஆம் தேதியன்று
   வயது.————.
   வருடம்.————.
4. விவாகமானவரா அல்லவா என்பது.————.
5. கல்வித் தகைமை.————.
6. சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளிற் பெற்றுள்ள தேர்ச்சி } சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்
   எழுத்து—
   வாசிப்பு—
7. பாடசாலையை விட்டு விலகிய பின்பு ஏதும் தொழிலில் ஈடுபட்டிருந்தீரா————.
   அப்படியாயின். தொழில் பார்த்த இடங்களின்
   விலாசம்.————.
   விட்டு விலகியதற்காக காரணம் குறிப்பிடுக————.
8. அறிவித்தல் 5(4) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதற்கு மேலதிகமாகப் பெறப்பட்ட நல்லொழுக்கச் சான்றிதழ் மூன்றின் பிரதிகள் அணைக்குக. (இவற்றில் ஒன்று உரிய மாதிரிப் பத்திரத்தில் கிராம சேவகரினால் கொடுக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும்).

என்னால் மேற்குறிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் அத்தாட்சிப்படுத்துகிறேன். ஏதும் விபரம் உண்மையற்றதாகவும், பிழையானதாகவும் காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு நான் அருகதையற்றவனாவேன் என்றும் தெரிவு பெற்ற பின் ஏதும் பிழை காணப்படின் நான் பதவி நீக்கம் செய்யப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

————————
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி :————.

3-103—02.03.73 ம் திகதிய வர்த்தமானி இல. 49

---

### உப அஞ்சல் அதிபர் பதவி—ஆனைப்பந்தி யாழ்ப்பாண மாநகரசபை

யாழ்ப்பாண மாநகரசபை "ஆனைப்பந்தி" உப அஞ்சல் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக் குறைந்த மாதாந்தப்படி ரூபா 75 ஆகும். விண்ணப்பதாரர்களாகிய இருபாலாரும் இலங்கையராகவும் 1973 ஏப்பிரல் 02 ஆம் திகதியன்று 21 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 45 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் யாழ்ப்பாண மாநார சபை எல்லைக்குள் 10 வருடங்கள் அல்லது அதற்குக் கூடுதலாக நிரந்தரமாக வசித்தவர்களாக இருத்தல் வேண்டும். உப அஞ்சல் அலுவலகத்திற்கு அண்மையில் உள்ள வட்டாரம் அல்லது வட்டாரங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சிங்கள மொழி/தமிழ் மொழியுடன் எண்கணிதம்/தூய கணிதம் வர்த்தக கணிதம்/உயர் கணிதம்/பிரயோக கணிதம்/கணக்கியல் உட்பட குறைந்தது 3 பாடங்களில் சிரேட்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில்/க. பொ. த. பரீட்சையில் (சாதாரணம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

உப அஞ்சல் அலுவலகத்தை அமைப்பதற்கு தற்பொழுது இருக்கும் ஆனைப்பந்தி உப அஞ்சல் அலுவலகத்திற்கு அண்மையில் ஏற்ற ஒரு கட்டடத்தை விண்ணப்பதாரர்கள் வாடகையின்றி அளித்தல் வேண்டும்.

யாழ்ப்பாணம் (வடக்கு) அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெறக்கூடிய அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்களைத் தயாரித்து 1973 ஏப்பிரல் 02 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக அவரை அடையக் கூடியவாறு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகங்களின் (வடக்கு) பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து மேலும் விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சி. ஜே. சேரசிங்க,
பதில் அஞ்சல் அதிபர் நாயகமும் தொலைத் தொடர்புப் பணிப்பாளரும்.

3-1—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

### நுவரெலியா மாவட்டத்தில் தியதிலக்க பிரிவிற்கு பிறப்பு இறப்பு உடஹேவாகெட்ட பிரிவிற்கு விவாக (கண்டியர் பொது) பதிவுக்காரர் பதவி

தியதிலக்க பிறப்பு இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள் ஆண் பெண் இருபாலரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதுக்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தவரையில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிறதராதரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும் காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளர் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும் கிராம நீதி மன்றங்களிலும் தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் நிலையம் சனசமூக நிலையங்களிலும் பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1973 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

டப்ளியூ. ஓ. எச். இந்திரரத்ன,
மேலதிக மாவட்டப் பதிவாளர்,
மாவட்டப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
நுவரெலியா,
1973.02.19.

3-88—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

### சளுத்துறை மாவட்டத்தில் குளுபான பகுதிக்கு பிறப்பு, இறப்பு பதிவுகாரர் பதவியும், றைகம் கோறளை பகுதிக்கு விவாக (பொது) பதிவுகாரர் பதவிக்குமான ஒரு பதிவுகாரர் பதவிக்கு விண்ணப்பம் கோரும் விளம்பரம்

குளுபான பிறப்பு இறப்புப் பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலமாக வசிப்பவர்கள் அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள் நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரி, கிராமசேவையாளர், உள்ளூராட்சி சபை, தபால் அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றம், பொலீஸ் சனசமூக நிலையம், பகிரங்க நிலையங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு பங்குனி மாதம் 20 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக இக்காரியாலயத்தில் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

ஈ. டீ. டபிள்யு. குணசேகர,
மாவட்டப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
களுத்துறை, 12.02.1973.

3-99—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

### வளிமண்டலவியற் றிணைக்களம்

### தொழில் நுட்ப வல்லுநர் பதவிக்கான விண்ணப்பம்

வளிமண்டலவியற்றிணைக்களத்தில் தொழில் நுட்ப வல்லுநர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பதிவஞ்சல் மூலம் 1973.03.30 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ பணிப்பாளர், வளிமண்டலவியற்றிணைக்களம், பௌத்தலோக மாவத்தை, கொழும்பு-7 என்ற முகவரிக்கு வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

2. திரட்டிய சம்பள அளவுத்திட்டம் :—

இப்பதவிக்கான திரட்டிய சம்பளத்திட்டம் பின்வருமாறு :—

ஆண்டொன்றுக்கு ரூபா 6,600—180 × 8—ரூபா 8,040.

3. வயதெல்லை :—1973.03.30 ஆம் திகதியன்று 40 வயதிற்கு மேற்பட்டவராகவோ அல்லது 24 வயதிற்குக் கீழ்ப்பட்டவராகவோ இருத்தல் கூடாது. (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை அமையாது.)

4. கல்வித்தகைமைகளும் வேறு பிற தகவுத்திறன்களும் :—

விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகள் பெற்றுள்ளாரெனத் திருப்திகரமான சான்று காட்டவேண்டும :—

(i) விண்ணப்பகாரர் பௌதிகவியல், கணிதம் (பயன்துறை அல்லது உயர்) ஆகிய பாடங்களோடு சி. பா. த. ப. உடையவராகவோ அல்லது இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழி, பௌதிகவியல், கணிதம் (பயன்துறை அல்லது உயர்) உட்பட மேலும் மூன்று பாடங்களோடு கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் (சாதாரண நிலை) உடையவராகவோ இருத்தல் வேண்டும்.

(ii) இலண்டன் சிற்றி அன்ட் கில்ட் நிறுவனத்தின் கீழ்காணும் சான்றிதழ்கள் அல்லது அவற்றிற்குச் சமமதிப்புள்ள சான்றிதழ்கள் :—

(1) வானொலி, வரிசை அனுப்பீட்டு முறை அ பகுதி ;

(2) தொலைப்போக்கு வரத்துத் தத்துவம் அ, ஆ பகுதிகள் ;

(3) வானொலி, வரிசை அனுப்பீட்டு முறை ஆ பகுதியும் பின்வரும் சான்றிதழ்களுள் ஒன்றும் :—

(அ) செயல்முறைக் கணிதம்.

(ஆ) பொறியியல் விஞ்ஞானம்.

(இ) ஆரம்பத் தொலைப் போக்குவரத்துச் செயல்முறைகள்; தொலை நிலை இயக்க மானி (ரேடார்) அனுபவம் கூடுதலான தகுதியாகக் கவனிக்கப்படும்.

(iii) ஒரு அங்கீகாரம் பெற்ற வானொலிப் பொறியியல் ஸ்தாபனத்திலோ அல்லது ஒரு அரசாங்க அலுவலகத்திலோ மேற்பார்வையாளராக ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட அனுபவம்.

குறிப்பு.—வளிமண்டலவியற்றிணைக்களத்திலுள்ள விண்ணப்பதாரிகட்கு மேற்குறிப்பிட்ட தேவைகள் குறைக்கப்படும். திணைக்கள விண்ணப்பதாரிகள் பௌதிகவியல், கணிதம் முதலிய பாடங்களுடன் க.பா.த. பத்திரம் அல்லது அதற்குச் சமமான பத்திரம் பெற்றவர்களாகவும் ; இலண்டன் சிற்றி அன்ட் கில்ட். நிறுவனத்தின் வானொலித் தத்துவம் 1 உடன் வானொலித் தொலைப்போக்குவரத்துத் தத்துவம் 1 உட்பட மின்னியக்கம் சம்பந்தமான 12 வருடச் சேவையுள்ளவர்களாகவும் வருடமொன்றிற்கு திரட்டிய சம்பளமாக ரூபா 5,592 க்குக் குறையாது பெறுபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

5. சேவை நியதிகள்.—இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் தனது திரட்டிய சம்பளத்தில் 6% த்தை அரசாங்க சேவைச் சகாய நிதிக்குச் செலுத்தல் வேண்டும். இதற்கான அரசாங்கத்தின் உதவுதொகை 9% ஆகும்.

6. பின்வரும் பத்திரங்களின் பிரதிகள் (மூலப்பிரதிகள் அல்ல) விண்ணப்பத்தோடு இணைக்கப்படல் வேண்டும். பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(அ) பிறப்புச்சாட்சிப் பத்திரம். (ஞானஸ்நானப்பத்திரம் அல்லது கல்விப் பிராமணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்படும் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) ஆகக் கூடிய கல்வித் தராதரப்பத்திரம் ;

(இ) தொழில்நுட்பத் தகைமைப் பத்திரம் ;

(ஈ) அனுபவம் பற்றிய பத்திரங்கள் ;

(உ) விண்ணப்பகாரரின் குணம் பற்றி அண்மையில் பெற்ற இரண்டு (2) நற்சான்றிதழ்கள். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவை தேவையற்றவை)

7. அரசாங்க சேவை அல்லது உள்ளூராட்சிச் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அவர்களின் நியமன அதிகாரிகளினூடாக தங்களது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். இது தவறி நேராக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

9. அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமானதும் இந்த வர்த்தமானியின் பகுதி I பிரிவு II ல் பிரசுரிக்கப்பட்டதுமான பொது நிபந்தனைகளுக்கு உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

ஜீ. எஸ். ஜயமகா,
பணிப்பாளர்.

வளிமண்டலவியற்றிணைக்களம்,
பௌத்தலோக மாவத்தை,
கொழும்பு 7.
1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ம் தேதி.

3-37—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

### தேசிய பாற்சபை

### வெற்றிடங்கள்

பாற்சபையின் சேவையிலுள்ள மேற்குறித்த பதவிகட்கு ஸ்ரீ லங்காவின் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க் குறித்த படிவத்திலே உள்ளபடி நிரப்பப்பட்டுக் கீழே கையொப்பமிட்டவருக்கு 1973.3.19 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படியாக அனுப்பப்பட வேண்டும்.

#### களஞ்சியக் கண்காணிப்பாளர்—தரம் III

சம்பளம்.—ரூபா 1,000—10 × 50—ரூபா 1,500 மாதாந்தம் (எல்லா உட்பட)

தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் பின்வரும் தகுதிகள் உடையவரென அத்தாட்சிப் படுத்த வேண்டும்.

(அ) 1973.3.19 அன்று 45 வயதிற்கு மேற்படாதவர்.

(ஆ) நல்லொழுக்கமும் திடகாத்திரமும் உடையவர்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக மொன்றன் பட்டக் கல்வி, 8 வருட அநுபவத்தில் 3 வருட அநுபவம் நிர்வாகத்தாத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் களஞ்சிய முகாமை, களஞ்சிய கையிருப்புக்கட்டுப்பாடு, பலவித கையிருப்பு கொடுப்பனவுப் பதிவுகள் பேணுதல், களஞ்சியப் பொருட்களுக்கு விலையிடுதல் ஆகியவற்றில் காணப்பட வேண்டும். தற்கால களஞ்சியக் கட்டுப்பாட்டு முறைகளில் அறிவு, களஞ்சிய முகாமையில் விசேட தகுதிகள் ஆகியன மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

அல்லது

சி. பா. த. அல்லது அதனோடொத்த தகுதியும் 15 வருட அநுபவமும் அதில் 3 வருட அநுபவம் நிர்வாகத்திறனில் கொண்டும் அதாவது அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனமொன்றில் களஞ்சிய முகாமை, களஞ்சிய கையிருப்புக் கட்டுப்பாட்டு முறைகள், பல்வித கையிருப்புக் கொடுப்பனவுப் பதிவுகள், களஞ்சியப் பொருட்களுக்கு விலையிடுதல் ஆகியவற்றில் காணப்படுதல் வேண்டும்.

பிணை.—தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் பணமாக அல்லது முறியாக ரூபா 10,000 பிணை கொடுக்குமாறு வேண்டப்படுவர்.

#### நிரம்பல்கள் உதவியாளர்—தரம் IV

சம்பளம்.—ரூபா 600—10 × 40—ரூபா 1,000 மாதாந்தம் (எல்லாம் உட்பட)

தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் பின்வரும் தகுதிகள் உடையவரென அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

(அ) 1973.3.19 அன்று 35 வயதிற்கு மேற்படாதவர்.

(ஆ) நல்லொழுக்கமும் திடகாத்திரமும் உடையவர்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக மொன்றன் பட்டதாரியும் அரசாங்க அல்லது வர்த்தக நிறுவனத்தில் களஞ்சியங்கள் அல்லது இறக்குமதி ஏற்றுமதி வேலைகளில் மூன்று வருட அநுபவம் அல்லது களஞ்சியக் கட்டுப்பாடு அல்லது கையிருப்புக் கட்டுப்பாடு, உள்ளூர்க் கொள்வனவுகள் இறக்குமதிச் சரக்குகள் கையாளலில் 10 வருட அநுபவம் (பாற் சபையின் சேவையில் களஞ்சியக்கட்டுப்பாடு, உள்ளூர்க் கொள்வனவுகள் இறக்குமதிச் சரக்குகள் கையாளல் ஆகியவற்றில் 5 வருட அநுபவமுள்ளவர்கள் வயதுக் கட்டுப்பாடின்றி விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்).

பிணை.—தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் ரூபா 5,000 பணமாக அல்லது முறியாகப் பிணைகட்டுமாறு வேண்டப்படுவர்.

2. சேவை நிபந்தனைகள்.—

(அ) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட விடத்து இப்பதவியில் நியமனம் பெறுவதற்கு முன் அவர் அரசாங்கத்தில் வகிக்கும் நிலையான பதவியைத் துறத்தல் வேண்டும். அப்படியாக அரசாங்க அதிகாரத்துடன் பதவியைத் துறக்குமிடத்துச் சபையின் சேவையிற் சேரும் தருணத்தில் உபகாரச் சம்பளச் சுற்றறிக்கையின் 48 அ பிரிவிலுள்ளபடி உபகாரச் சம்பள நன்மைகள் யாவற்றையும் தொடர்ந்து வைத்திருப்பார். திணைக்கள கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களது விண்ணப்பங்கள் யாவும் 1965 ஓகத்து 20 ம் திகதி வெளிவந்த 666 ம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைக்கு இணங்கவே கவனிக்கப்படும். திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்கள் மேற்குறிப்பிட்ட திறைசேரிச் சுற்றறிக்கைக்கு இணங்க உத்தியோகத்தர்களை விடுவிக்க முடியுமா என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) அபேட்சகர் அரசாங்க சேவையில் முன்னரே உறுதிப்படுத்தப் பட்டிருந்தாலன்றி நியமனங்கள் யாவும் நியமித்த திகதியில் இருந்து மூன்று ஆண்டுகட்குத் தேர்வாய்வு முறையில் அமையும்.

(இ) விண்ணப்பதாரர்கள் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளின் விதிகளுக்கு இணங்கவும் தற்போதிருக்கும் அல்லது இனிமேல் உருவாக்கப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கவும் அரசாங்க மொழிக் கொள்கைக்கு அமைந்து நடக்கும்படி வேண்டப்படுவர்.

(ஈ) தேர்வாய்வுக்குரிய கால எல்லை முடிந்தபின் உறுதிப்படுத்துவது பிறவற்றுள் அரசகரும மொழித் தேவைகளுக்கு இணங்குவதைப் பொறுத்திருக்கும்.

3. ஒப்பந்த நிபந்தனைகள்.—இப்பதவிகள் நிரந்தரமானவை; தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் சகாய நிதி நன்மைகட்குத் தகுதியுடையவர்.

4. மருத்துவச் சோதனை.—நியமனம் பெறுபவர்கள் பதவியேற்கு முன்பு அரசாங்க மருத்துவ ஸ்தாபனமொன்றின் மருத்துவ சோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க்குறிப்பிட்ட சான்றிதழ்களின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) மிகக் கூடிய கல்வித்தகைமை, உயர் தொழிலுக்குரியதகைமைச் சான்றிதழ்கள்.

(இ) குணவியல்புச் சான்றிதழ்கள் இரண்டு. இவற்றுள் ஒன்று கல்விப் பணிப்பாளர் கல்லூரிப்போதனாசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) முன்னர் வேலை வழங்கியவர்களிடமிருந்து அங்கு செய்த கடமைகளின் தன்மையைக் காட்டும் சான்றிதழ்.

6. விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான கடிதத்தொடர்புகள் யாவும் தலைவர் பாற்சபை என்ற விலாசத்திற்கன்றி சபையின் சேவையிலுள்ள வேறெந்த உத்தியோகத்தருக்கோ தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

தலைவர்,
பாற்சபை.

பாற்சபைத் தலைமைக் காரியாலயம்,
த. பெ. எண் 1155,
நாரஹென்பிற்ற,
கொழும்பு-5.

### விண்ணப்பப் படிவம்

1. பதவி :————.
2. முழுப் பெயர் :————.
3. தனிப்பட்ட முகவரி :————.
4. விண்ணப்பதாரரின் பிறந்த திகதியும் இடமும் :————. (பிறப்புச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படவேண்டும்).
5. விண்ணப்பதாரரின் தந்தையின் பிறப்பிடம் :————.
6. உயர் கல்வித் தகைமைகள் :————. (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல்வேண்டும்)
7. தொழில் தகைமைகள் :————. (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).
8. சிங்களம்/அல்லது தமிழ் அறிவு :————.
9. முன் அநுபவ விபரங்கள் :————. (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).
10. தற்போதைய உத்தியோக விபரங்கள் :————.
11. விண்ணப்பதாரரின் குணம் பற்றிச் சான்று பகரக் கூடிய இருவரின் பெயர்கள் :————.

————————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

3-101—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

## ஸ்ரீ லங்கா கடற்படை

### சிறுதிற மேற்பார்வையாளர் பதவிகள்—I ஆந் தரம்

ஸ்ரீ லங்கா கடற்படையின் குடியியல் நிருவாகப் பிரிவில் I ஆந் தர சிறுதிற மேற்பார்வையாளர் (கட்டடங்கள்) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தொழில் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.

(i) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரித்தற்றதுமாகும்.

(ii) மூன்று ஆண்டுகள் ஒரு தகைமைகாண் காலமாக இந்நியமனத்திற்கு அமையும். ஓர் அபேட்சகர் அரசாங்கத்தில் நிரந்தர சேவையில் உள்ளவராயின் அவருடைய தகுதி காண்காலம் இரண்டு ஆண்டுகளாகும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர் தீவின் எப்பாகத்திலேனும் சேவை புரியத் தயாராக இருத்தல் வேண்டும்.

(iv) அரசகரும மொழிக் கொள்கையின் பொருட்டு தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் அரசாங்க சேவைக்குப் புதிதாகச் சேர்ந்தவர்களாயின், அவர்கள் அரசாங்க மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் இப்பொழுது அல்லது எதிர்காலத்தில் புகுத்தப்படும் எந்தவித சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்குவார்கள் என்ற நிபந்தனைக்கு சம்மதித்தல் வேண்டும்.

(v) இந்த வர்த்தமானியின் பகுதி I, தொகுதி II இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு ஏற்புடையனவாகிய பொது நிபந்தனைகளைப் பார்வையிடும்படி வேண்டப்படுகின்றது.

3. சம்பளமும் படிகளும்.

சம்பள அளவுத் திட்டம் ஆண்டிற்கு (திரட்டப்பட்ட) ரூபா 3,450—90×12—4,530 ஆகும்.

4. வேண்டப்பட்ட தகைமைகள்.—

(அ) விசேட தொழில் பயில்வோர்

(i) கணிதமும் பௌதிகமும் பாடங்களாகக் கொண்ட சி. த. ப. அல்லது கணிதமும் பௌதிகமும் உட்பட 2 தடவைகளுக்கு மேற்படாத, 6 பாடங்களில் சித்திபெற்ற க. பொ. த. பத்திரம்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கப் பயிற்சித் தாபனமொன்றில் 5 வருட தொழிற் பயிற்சி ஒன்றினைத் திறமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iii) 73.3.31 ஆம் திகதி 21 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) திணைக்கள விண்ணப்பதாரர்கள்—

(i) திறமையாக வாசிக்கவும், பதிவுகளைப் பேணவும், தெளிவான அறிக்கைகளை எழுதவும் தெரிந்திருத்தல் வேண்டும்.

(ii) அவர் மேற்பார்வையாளராக எதிர்பார்க்கப்படும் தொழில் அனுபவமும் அறிவும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) குறைந்தது 30 தொழிலாளர்களை மேற்பார்வை செய்வதில் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) கடந்த 5 ஆண்டுகளுள் சமாளிக்கும் திறனும், சிறப்பு வளமும், தலைமைதாங்கலும் கொண்டுள்ளதுடன் நல்ல அறிக்கை ஒன்றைப் பேணுதலிலும் திறமையாக இருத்தல் வேண்டும்.

(v) அவர் விண்ணப்பிக்கும் அதே தொழிலில் II ஆந் தர சிறுதிற மேற்பார்வையாளராக 4 வருட அனுபவமும், அல்லது II ஆந் தர சிறுதிற மேற்பார்வையாளர் சேவையில் மொத்தம் 6 வருட காலமும் அத்துடன் நன்கு நிறுவப்பட்ட தாபனமொன்றில் குறைந்தது 50 பேர்களுக்கு ஒரு மேற்பார்வையாளராகப் பொறுப்பு வகித்தலிலும் இருத்தல் வேண்டும். ஒரு தொழிலாளி என்ற வகையில் 5 வருட சேவை மேலதிகமாக இருத்தல் வேண்டும். (சான்றிதழ்கள் மூலம் சேவைக்காலம் காட்டப்படுதல் வேண்டும்).

(vi) 73.3.31 ஆம் திகதி 29 வயதிற்குக் குறையாதவராய் இருத்தல் வேண்டும்.

(இ) மற்றையோர்—

(i) 8 ஆந் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) பதிவேடுகளைப் பேணுவதிலும் விளக்கமான அறிக்கைகளை எழுதுவதிலும் திறமை இருத்தல் வேண்டும்.

(iii) அவர் மேற்பார்வையாவராக எதிர்பார்க்கப்படும் தொழிலில் அனுபவமும் அறிவும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(iv) ஒரு தொழிலாளி என்ற வகையில் மொத்தம் 15 வருடங்கள் சேவையாற்றி இருப்பதுடன், அதில் 7வருடங்கள் ஆவது 50 ஆட்களுக்குக் குறையாதவர்களை மேற்பார்வை செய்வதில் திறனும், நன்கு நிறுவப்பட்ட தாபனம் ஒன்றில் தொழிலாளியாக 5 வருட அனுபவமும் இருத்தல் வேண்டும். (சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும்.)

(v) நன்னடத்தை பற்றிய சான்றிதழ்கள் பொறுப்பு வாய்ந்த இருவர்களிடம் பெறப்படுதல் வேண்டும். அத்துடன் ஒழுக்கம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(vi) 73.3.31 ஆம் திகதி 29 வயதிற்குக் குறையாமலும் அல்லது 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—ஐ.இ. தளச் சேவையானது நன்கு நிறுவப்பட்ட தாபனம் ஒன்றிற்கு சமனாகக் கருதப்படும்.

5. அரசாங்க தொழிற்பாடசாலைகளில், நகர சமூகத் தாபனங்களில், தொழில்நுட்பக் கல்லூரிகளில், அல்லது அவற்றிற்குச் சமமான தாபனங்களில் குறிப்பிடப்பட்ட தொழில் பெறப்பட்ட தொழிற் கல்வித் தகைமைகளை உடைய அபேட்சகர்தளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனது விண்ணப்பத்துடன் பின்வரும் பிரதிகளை இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(ஆ) உயர்கல்வித் தகைமைகளுக்கான சான்றிதழ்கள் ;

(இ) அண்மையில் பெறப்பட்ட இரண்டு நற்சான்றிதழ்கள் (ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரர் நற்சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை.)

(ஈ) தொழில்நுட்ப தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள சான்றிதழ்கள்.

(குறிப்பு.—சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் அனுப்பப்பட வேண்டியதில்லை.)

7. அரசாங்க சேவையில் இருப்பவர்களின் விண்ணப்பங்கள் அவர்களுடைய திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

8. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தைப் போல் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பதிவுத் தபால் மூலம் குடியியல் நிருவாக அலுவலரும் கணக்காளரும், ஸ்ரீ லங்கா கடற்படை, த. பெ. இல. 593, கொழும்பு 1, என்னும் முகவரிக்கு 73.3.31 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வண்ணம் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையிலே "சிறுதிற மேற்பார்வையாளர் I ஆந் தர (கட்டடங்கள்) பதவிக்கு விண்ணப்பம்" என எழுதப்படுதல் வேண்டும்.,

9. இவ்வேண்டுதல்களை உறுதிப்படுத்தாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வே. அரியரத்தினம்,
குடியியல் நிருவாக அலுவலரும்
கணக்காளரும்,
ஸ்ரீ லங்கா கடற்படை.

தலைமை அலுவலகம்,
ஸ்ரீ லங்கா கடற்படை,
கொழும்பு 1,
1973, பெப்புருவரி, 19 ஆம் திகதி.

3-100—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

அரசாங்க அச்சுத் திணைக்களம்

தமிழ் லைனோ இயக்குநர் பதவி

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் தமிழ் லைனோ இயக்குநர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் உள்ளது போல் தயாரித்து விண்ணப்பங்கள் 1973 ம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக, அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8, என்ற விலாசத்திற்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். தனிப்பட்ட முறையில் அரசாங்க அழுத்தகருக்கோ அல்லது இத் திணைக்களத்தில் உள்ள வேறு எந்த அலுவலருக்கோ விலாசமிடப்பட்டு அனுப்புதல் கூடாது.

2. சம்பள அளவுத் திட்டம்.—இப்பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—ஆண்டொன்றுக்கு ரூபா 3,630—90 ×17 ரூபா 5,160 ஆண்டொன்றுக்கு ரூபா 4,620 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. சேவை நிபந்தனைகள்.—பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதியத்துக்குரித்தற்றவையுமாகும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசாங்க சேவை சகாய நிதியத்துக்கு உதவுதொகை வழங்குநராகவிருப்பார். தகுதிகாண் காலம் மூன்று வருடங்களாகும்.

4. தேவைப்படும் தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் சமர்ப்பிக்க வேண்டிய திருப்திகரமான சான்றுகள், அவர் :

(i) விண்ணப்ப முடிவு திகதியன்று தான் 30 வயதுக்குக் குறைந்தவராயும் ;

(ii) சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திர (சாதாரணதர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் சிங்கள/தமிழ்ப் பாஷையுடன் எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ; அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஓர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் மூன்று வருட காலம் தொழில் பயிலுனராக சேவை புரிந்திருக்க வேண்டும்.

அல்லது

(ஆ) கனிட்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் ஓர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் குறைந்தது ஆறு வருடம் தொழில் அநுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(5) ஆட்சேர்த்தல் முறை.—தொழில் முறைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளைக்கொண்டு அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(6) விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை இணைத்தல் வேண்டும் :—

(அ) விண்ணப்பகாரரின் பிறப்புப்பதிவுச் சான்றிதழ்,
(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்,
(இ) தொழிலில் அநுபவத்தை நிரூபித்தற்காய சான்றிதழ்,

(ஈ) அண்மையில் பெற்ற பண்புச் சான்றிதழ்கள் இரண்டு. (இவற்றில் ஒன்று பகுதிக் கிராமசேவையாளரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும்)

7. இவ் வர்த்தமானியின் பகுதி I தொகுதி IIஅ இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள நியமனங்களுக்கு ஏற்புடையனவான பொது நிபந்தனைகளைக் கவனமாகப் பார்க்குமாறு விண்ணப்பதாரர்கள் வேண்டப்படுகிறார்கள்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8, 1973.2.21.

மாதிரி விண்ணப்பப் படிவம்

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் தமிழ் லைனோ இயக்குநர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.

(அ) குடும்பப் பெயர் :————.

(ஆ) வேறு பெயர்கள் :————.

2. நிரந்தர விலாசம் :————.

3. (அ) பிறந்த திகதி :————.

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :————.
————வருடங்கள்————மாதங்கள்————நாட்கள்

4. நாட்டினம் :————.
(1) பரம்பரையினலா அல்லது பதிவினலா ? :————.

5. கல்வித் தகைமைகள் :————.

| சித்தியெய்திய பரீட்சை | வருடம் | சித்தியெய்திய பாடங்கள் |
|---|---|---|

6. அனுபவம் :————.

| விண்ணப்பதாரர் சேவை புரிந்த அல்லது பயிற்சி பெற்ற நிறுவனம் | இருந்து | வரை |
|---|---|---|

7. தற்போதைய தொழில் :

8. விண்ணப்பதாரியின் உறுதியுரை :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள எவையேனும் விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவையெனக் காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன் தகுதியிழந்தவராக்கப்படுவதற்கும், நியமனத்தின் பின்னர் பிழைபாடு கண்டுபிடிக்கப்படின் நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்யப்படுவதற்கும் நான் ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

3-150—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இல. 1/112/5 (ஜீ)

## தட்டெழுத்தாளர் சேவையின் உயர்தரத்திற்குப் பதவியேற்றம் செய்வதற்கான தகுதிப் பரீட்சை—1973, மே மாதம்

**பரீட்சைத் தேதி :**—தட்டெழுத்தாளர் சேவையின் உயர்தரத்திற்குப் பதவியேற்றஞ் செய்வதற்கான தகுதிப் பரீட்சையொன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பரீட்சை ஆணையாளரால் கொழும்பு, கண்டி, காலி, குருநாகல், அநுராதபுரம் ஆகிய இடங்களில் நடாத்தப்படும். இப் பரீட்சையின் எழுத்துப் பகுதி 1973 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆந் தேதியன்று மு. ப. 9.00 மணிக்கு நடாத்தப்படும். போதியளவு எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காத எப் பரீட்சை நிலையமும் நீக்கப்படலாம்.

2. **பரீட்சை முடிவுகள் பிரசுரித்தல் :**—சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் ஸ்ரீ லங்கா குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்படும். நியமனங்கள் பரீட்சைத் தேதியிலிருந்து கொடுபடும்.

3. **தகவுத்திறன்.**—அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதியின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தட்டெழுத்தாளர் சேவையின் பொதுத் தாத்திலுள்ளவர்களும் 1973 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆந் தேதியன்றோ அதற்கு முன்போ தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்களுமான தட்டெழுத்தாளர்கள் இப் பரீட்சையெடுப்பதற்குத் தகவுடையவராவர். ஆனால்—

(அ) அவர்கள் 1973 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆந் தேதியன்று தட்டெழுத்தாளர் சேவையின் பொதுத் தரத்தில் ஆகக்குறைந்தது 4 ஆண்டுச் சேவையினை முடித்திருத்தல் வேண்டும் ;

(ஆ) அவர்களின் சேவை எல்லாவகையிலும் திருத்திகரமானதென அவர்களின் திணைக்களத் தலைவர்கள் சான்றளித்திருத்தல் வேண்டும். திருப்திகரமான சேவையைப் பொறுத்தவரையில் பரீட்சார்த்திகள் நான்கு சொல்லப்பட்ட வருட காலத்தில் எல்லா சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல் வேண்டும். கடைசி சம்பள உயர்வுத் தேதியிலிருந்து அவர் 1 வார வேதனத்திற்கு மேலான அபராதம் விதிக்கப்பட்டாலும் அல்லது தீவிர எச்சரிக்கை த்விர வேறு ஏதும் தண்டனை விதிக்கப்பட்டாலும் அவர் விண்ணப்பித்தற்கு தகவற்றவராவர்.

4. **விண்ணப்பங்கள் :**—(1) இப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதற்காய் மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவிப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பகாரர்கள், ஒரு முழுத்தாளின் அரைத் தாளில் (வேறு எந்த அளவுத் தாளிலுமன்றி) தமது சொந்த விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். இந் நோக்கத்திற்காக ஒரு தாள் மட்டும் உபயோகிக்கப்பட வேண்டும். குறித்த படிவத்தின் 1 முதல் 10 வரையுள்ள கூடுகள் முதற் பக்கத்திலும், திணைக்களத் தலைவரின் சான்றிதழும் அத்தாட்சிப்படுத்தலும் இரண்டாம் பக்கத்திலுமிருத்தல் வேண்டும். இப்படிவத்தைத் தட்டெழுத்திலும் தயாரிக்கலாம் ; ஆனால், அது பரீட்சார்த்தியின் சொந்த கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும் ; அத்துடன் திருப்திகரமான சேவை பற்றிய சான்றிதழ்களும் அனுப்பப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் எல்லா வகையிலும் நிறைவாகவுள்ளதென்பதையும் அவ் விண்ணப்பப் படிவத்திற்கு இணைக்கப்பட்டுள்ள சான்றிதழில் தாம் கையொப்பமிட்டுள்ளாரென்பதையும் திணைக்களத் தலைவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவர்கள் தகவுடைய பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை 1973 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளரை அடையத்தக்கதாக, கொழும்பு-2, பரீட்சை ஆணையாளர் என்னும் முகவரிக்குப் பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அத் தேதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. **பரீட்சைக்கு அனுமதி :**—(i) அங்கிகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகள் யாவர்க்கும் பரீட்சை ஆணையாளர் அனுமதி அட்டைகள் வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கு தமது அனுமதி அட்டைகளைக் காட்டுதல் வேண்டும். இவ்வனுமதி அட்டைகளின்றிப் பரீட்சைக்கு அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ii) பரீட்சைகளை நடாத்துவதற்காகப் பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுண்டவராவார்கள். இவ் விதிகளையுந் ஒழுங்கு விதிகளையும் மீறுபவர்கள் அன்னாரினால் விதிக்கப்படும் எத் தண்டனைக்கும் ஆளாவர்.

(iii) பரீட்சார்த்திகளுக்காய விதிகளும் ஒழுங்கு விதிகளும் இவ்வறிவிப்பின் இறுதியில் வேறாக அச்சிடப்பட்டுள்ளன.

6. **அரசாங்க உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விடுதலை :**—பரீட்சை ஆணையாளரினால் அங்கிகரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்குரிய தமது திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகக் கடமை விடுதலை அளிக்குமாறு திணைக்களத் தலைவர்கள் வேண்டப்படுகின்றனர். பயணச் செலவு கொடுக்கப்படமாட்டாது.

7. **பரீட்சைக் கட்டணங்கள் :**—தட்டெழுத்தாளர் சேவையில் உயர்தரத்திற்கு முன்னர் தோன்றிய பரீட்சார்த்திகள் முத்திரைக் கட்டணம் செலுத்தல் வேண்டும். இப்பரீட்சைக்கு முதற் தடவையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. முன்னர் பரீட்சைக்குத் தோற்றிய

பரீட்சார்த்திகளின் விண்ணப்பம் முறையான கையொப்பத்தில் பெறுமதிநீக்கம் செய்யப்பட்டுத் திகதியிடப்பட்ட 25 ரூபா பெறுமதியான முத்திரைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். எச் சந்தர்ப்பத்திலும் கட்டணம் மீள்ளிப்புச் செய்யப்படமாட்டாது. இப்பரீட்சைக்கு கட்டப்பட்ட கட்டணங்கள் வேறெதும் பரீட்சைக்கு மாற்றப்படமுடியாது.

8. **பரீட்சைத் திட்டம்.**—குறித்த பரீட்சைக்குரிய பாடங்களும் ஒவ்வொரு பாடத்திற்குமொதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே தரப்பட்டுள. எழுத்துத் தாள்கள் யாவற்றிலும் கூடாத எழுத்திற்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். தெளிவற்ற முறையில் எழுதும் பரீட்சார்த்திகள் தகைமை நீக்கம் செய்யப் படுவதற்கும் ஆளாவர்.

**புள்ளிகள்**

(1) பொருத்தமான அலுவலகக் குறிப்புகளுடன் ஓர் அரசகருமக் கோப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு, அரசகரும விடயமொன்று தொடர்பான ஒரு கடிதத்தை அல்லது அறிக்கையை வரைதல் (ஒரு மணித்தியாலம்) 50

(ii) தட்டெழுத்து :—ஆகக்குறைந்த கதி, சிங்களத்தில்/தமிழில் நிமிடத்திற்கு 25 சொற்கள் அல்லது ஆங்கிலத்தில் நிமிடத்திற்கு 40 சொற்கள் ஆகும்.
(20 நிமிடங்களுக்கு) 150

குறிப்பு.—(1) சிங்கள மொழி மூலம் ஆட்சேர்க்கப்பட்ட பரீட்சார்த்திகள், முழுப் பரீட்சையையும் சிங்கள மொழியிலேயே எடுத்தல் வேண்டும்.

தமிழ்/ஆங்கில மொழி மூலம் ஆட்சேர்க்கப்பட்ட பரீட்சார்த்திகள் இப்பரீட்சையை ஆட்சேர்க்கப்பட்ட மொழியிலேயே யெடுத்தல் வேண்டும். ஆயினும் அவர்கள் தமது விருப்புரிமையின் பேரில் இப் பாடங்களில் ஒன்றை அல்லது முழுப் பரீட்சையையும் சிங்கள மொழியில் எடுக்கலாம். இப் பரீட்சையில், (ii) ஆம் இலக்கப் பாடத்தைச் சிங்கள மொழியிலெடுத்துச் சித்தியெய்துவோர் தட்டெழுத்துச் செய்யும் கடமைகளைச் சிங்கள மொழியிலும் செய்யுமாறு வேண்டப்பட்டால், அவ்வாறு செய்வதற்குக் கடப்பாடுடையவராவார்.

(2) பரீட்சார்த்திகள் முதலில் (i) ஆம் இலக்கப் பாடத்தில் சோதிக்கப்படுவர். அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40 சதவீத புள்ளிகளைப் பெறுவோர் மட்டுமே பாட இல. (ii) தட்டெழுத்து என்பதற்குத் தோற்றுவதற்குத் தகவுடையவராவர். (ii) ஆம் இலக்கப் பாடத்திலான பரீட்சை நடாத்தப்படும் இடம், தேதி, நேரம் என்பன, அவ்வாறு தகவுடைய பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சை ஆணையாளரால் அறிவிக்கப்படும்.

(3) (i) ஆம் இலக்கப் பாடத்திற்குரிய புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40 சதவீதப் புள்ளிகளையும், (ii) ஆம் இலக்கப் பாடத்திற்கான புள்ளிகளில் ஆக்குறைந்தது 50 சதவீதப் புள்ளிகளையும் பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் பதவியேற்றம் செய்யப்படுதற்குப் பெறுதல் வேண்டும்.

9. பாட இல. (ii) : தட்டெழுத்து—என்பதற்குத் தோற்றுவதற்குத் தகைமையுடையவராகும் பரீட்சார்த்திகள், மேற்போந்த 8 ஆம் பந்திக்குத் தரப்பட்டுள்ள குறிப்பு (2) இன் கீழ் பரீட்சை ஆணையாளரால் குறிப்பிடப்பட்ட தேதியன்று அப்பாடத்திலான பரீட்சையில் தாம் உபயோகிப்பதற்குத் தமது சொந்தத் தட்டெழுத்துப் பொறிகளைக் கொண்டுவருதல் வேண்டும். பரீட்சார்த்திகள் ஒரு தட்டெழுத்துப் பொறியைப் பொதுவில் உபயோகிப்பதற்குத் தங்களுக்கிடையே ஒழுங்கு செய்வதற்கனுமதிக்கப்படுவர். ஒரு தட்டெழுத்துப் பொறியை நான்கு பேர்களுக்கு மேல் உபயோகித்தலாகாது. சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள், தேர்வு தொடங்க முன்னர், பரீட்சகருடன் உசாவி, இவ்வாறு ஒரு தட்டெழுத்துப் பொறியைப் பொதுவில் உபயோகிப்பதற்கு ஒழுங்குகளைச் செய்து கொள்ளல் வேண்டும்.

இப்பரீட்சைக்குத் தோற்றும் தட்டெழுத்தாளர்கள், தங்கள் அலுவலகத் தட்டெழுத்துப் பொறிகளைப் பரீட்சை மண்டபத்திற்கு எடுத்துச் செல்லுவதற்குத் திணைக்களத் தலைவர்கள் அனுமதியளிப்பர். இச் சலுகையை அனுமதிக்க முன்னர் தட்டெழுத்துப் பொறிகளை உடனடியாகவும் பாதுகாப்பாகவும் தாம் திருப்பிக் கொடுப்பரென்வும் தட்டெழுத்துப் பொறிகள் தங்கள் வசமிருக்கும்போது ஏற்படும் இழப்பு அல்லது சேதம் எதற்கும் தாங்கள் பொறுப்பாளியாவர்களென்வும் கூறும் எழுத்திலான பொறுப்புக் கூற்றொன்றினை இச்சலுகையைப் பயன்படுத்தும் உத்தியோகத்தர்களிடமிருந்து திணைக்களத் தலைவர்கள் பெறுதல் வேண்டும்.

10. இப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் உயர் தரத்திற்குப் பதவியேற்றஞ் செய்யப்படும் உத்தியோகத்தர்கள், அவர்கள் நியமிக்கப்படும் எந்தத் திணைக்களத்திலும் அல்லது நிலையத்திலும் சேவை செய்யுமாறு வேண்டப்படுவர்.

11. இவ் வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத எவ் விடயமும் அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதியின் தற்றுணிபின்படி கையாளப்படும்.

ஆர். எம். பி. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர்
அதிபதிக்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
(இணைந்த சேவைகள் பகுதி)
சொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு-7,
1973, பெப்ரவரி 21.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**தட்டெழுத்தாளர் சேவையின் உயர்தரத்திற்குப் பதவியேற்றஞ் செய்வதற்கான தகுதிப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதற்காய விண்ணப்பம்—1973, மே மாதம்**

சுட்டிலக்கம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. முதலெழுத்துக்களுடன் உங்கள் பெயர்.————.
(தனித்தனி பெரிய எழுத்துக்களில்)
எல்லா முழுப் பெயர்களும் :————.
(தனித்தனி பெரிய எழுத்துக்களில்)
2. முழு அலுவலக முகவரி :————.
3. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நீங்கள் விரும்பும் நிலையம் :————.

(1) (முதல் முன்னுரிமை) (2) (இரண்டாம் முன்னுரிமை)

4. (அ) தட்டெழுத்தாளர் சேவைக்கு நியமிக்கப்பட்ட தேதி :—
ஆண்டு.————. மாதம்.————. தேதி.————.

(ஆ) 1973-5-1 ஆந் தேதியிலுள்ளவாறாக, பொதுத் தரத் தட்டெழுத்தாளராகக் கடமை ஆற்றிய சேவைக் காலம்—ஆண்டு மாதங்களில் :
————ஆண்டுகள் ————மாதங்கள்.

5. உங்கள் நியமனத்தில் நீங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீர்களா :————.
6. நீங்கள் தற்பொழுது சேவையாற்றும் திணைக்களம் :————.
7. நீங்கள் ஆட்சேர்க்கப்பட்ட மொழி :————.
8. நீங்கள் இப்பரீட்சை எடுக்கும் மொழி :————.
(i) எழுத்து வினாத்தாள் :————.
(ii) தட்டெழுத்து :————.
9. 1973.5.1 ஆந் தேதியிலுள்ளவாறு ஆண்டுத் திரட்டிய வேதனம் :————.
10. முத்திரைக்கான கூடு :————.

| ரூபா 25/— |
|---|

கவனிப்பு.—பரீட்சார்த்திகள் 25/- ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டி அவற்றின் மேல் தம் கையொப்பத்தையும் திகதியையும் இடுதல்மூலம் பெறுமதி நீக்கம் செய்தல் வேண்டும். முத்திரைகள் ஒன்றன்மேல் ஒன்று ஒட்டப்படுதல் கூடாது.

என்னால் மேலே தரப்பட்டுள்ள தகவல் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையும் சரியானவையுமென எனது நேர்மையின் பேரில் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இப் பரீட்சையைக் கட்டுப்படுத்தும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கியொழுக நான் உடன்படுகின்றேன்.

பரீட்சார்த்தியின் கையொப்பம்.
(கீழேயுள்ள குறிப்பைப் பார்க்க)

தேதி :————.

கவனிக்க.—பரீட்சார்த்தி தமது திணைக்களத் தலைவர் அன்றி அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தர் அல்லது அவரது பகுதித் தலைவர் முன்னிலையில் கையொப்பமிடுதல் வேண்டும்.

திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

(i) இப் பரீட்சார்த்தி இத் திணைக்களத்தில் சேவை செய்யும், தட்டெழுத்தாளர் சேவையின் பொதுத் தரத்திலுள்ள ஒரு தட்டெழுத்தாளரென்றும்,

(ii) 4 ஆம், 5 ஆம், 7 ஆம், 9 ஆம், 10 ஆம் கூடுகளில் தரப்பட்டுள்ள விபரங்கள் செவ்வை பார்க்கப்பட்டு, சரியாகவுள்ளனவெனக் காணப்பட்டுள்ளன வென்றும்,

(iii) அவரின் வேலையும் நடத்தையும் முழுக் காலமும் திருத்திகரமாகவுள்ள தென்றும்,

(iv) 1973 ஆம் ஆண்டு ..................மாதம் .................. ஆந் தேதிய இலங்கை அரசாங்கச் செய்திமடலில் (வர்த்தமானி) வெளியிடப்பட்ட அறிவிப்பின் நியதிகளின் பிரகாரம் அவர் இப் பரீட்சையெடுப்பதற்குத் தகவுடையவரென்றும்,

நான் அத்தாட்சிப் படுத்துகின்றேன்.

திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப் பெயரும்.

கையொப்பமிடும் உத்தியோகத்தரின்
பதவிப் பெயர்.

தேதி :—

### கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

குறிப்பு.—திணைக்களத் தலைவர் முன்னிலையில் அல்லது அத்தகைய திணைக்களத் தலைவரின் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்ற ஓர் உத்தியோகத்தர் முன்னிலையில், அல்லது அவரது பகுதித் தலைவர் முன்னிலையில் பரீட்சார்தி கையொப்பமிடல் வேண்டும்.

திரு. ........................................என்பவர் எனது அலுவலகத்திலுள்ள ஓர் உத்தியோகத்தர் என்வும், அவரை நான் நன்கு அறிவேனெனவும், அவர் 1973 ஆம் ஆண்டு ..................மாதம் .................. ஆம் நாளில் எனது முன்னிலையில் தமது கையொப்பத்தையிட்டாரெனவும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

அத்தாட்சிப்படுத்தும் ஆளின் கையொப்பம் :————.

பெயர் பதவிப்பெயர், நிலை :————.

முகவரி :————.

### பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்:—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும்பொழுதும் வெளியேறும்பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3 பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தை தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ் விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ' பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறுக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக் கூடாது. இவ் விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறி விடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல விடயங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ் விதிக்கு மாறுக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அழகிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறொன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியனவகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாளகளை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந் நிபந்தனைகளை மீறினுல் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களி

னும் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுது மீண்டும் வரும்பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறெரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறெரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக் கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறெருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

*பரீட்சார்த்திகளுக்கு*

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப் பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்கு தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்திற்குத் தோற்றும்பொழுது இப் பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்து போனல் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத் தாள், பேரேட்டுத் தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது, மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும். சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(v) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில் ஒவ்வொரு வெற்றுக். கோடு விடப்படவேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vi) உமக்கு கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(vii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப் படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும், பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப் படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறு பக்கத்திலும் தொடரப்படுமானல் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(viii) ஒவ்வொரு படத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(ix) வினப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினக்கள் தெரிவுக்குரிய வினக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(x) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினல் உமது விடைத்தாள் காணமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xi) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினல் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு-2.

3-102—02-03-73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

அரசாங்க கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காய
மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை—1973

திருத்தம்

(1) 1972 இன் மார்ச்சு 10 ந் தேதிய அரசாங்க வர்த்தமானியில் கொடுக்கப்பட்ட இப்பரீட்சைத் திட்டம் நேர்முகப் பரீட்சை பற்றிய பத்தாம் பந்தியிலுள்ள நேர்முகப் பரீட்சை :—

"பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றத் தகவு பெறுவதற்கு ஒவ்வொரு பாடங்களிலும் 45 சதவீதம் புள்ளிகளைப் பெறல் வேண்டும்"

என்னும் இவ் வாசகத் தொகுதியை நீக்கி அதற்குப் பதிலாக கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வாசகத் தொகுதியைச் சேர்த்தலினல் திருத்தப்பட்டுள்ளது.

"பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றத் தகவு பெறுதற்கு எல்லாப் பாடங்களிலும் (வியாபாரக் கணிதம் தவிர்த்து) குறைந்த பட்சம் $33\frac{1}{3}$ சதவீதம் புள்ளிகள் பெறல் வேண்டும். இவ்வேற்பாட்டுக்கு இணங்க நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்குத் தகைமை அடைவோரின் எண்ணிக்கை வெற்றிடங்களின் இருமடங்குத் தொகையிலும் குறையுமானல் நேர்முகப் பரீட்சைக்குக் கூடிய அளவு ஆட்களை அழைப்பதற்கான உரிமையை அரசாங்கப் பணிப்பாளர் நாயகம் தம்மாட்டுக் கொண்டுள்ளார்,"

(2) 8 ம் பந்தியின் கீழ் பின்வரும் புதிய உபபந்தியைச் சேர்த்தல் வேண்டும் :—

"தெரிவு செய்யும் முறை.—நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்ட எவரேனும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு கொடுக்கப்பட்ட பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் 33⅓ வீதம் புள்ளிகள் எடுக்கத் தவறினால் அவருக்கு அரசாங்க கணக்காளர் சேவையில் இடையேற்பாடான நியமனம் மட்டுமே கொடுபடும். மேலும் அவர் இடையேற்பாடான நியமனம் பெற்ற தேதியிலிருந்து 3 வருட கால எல்லைக்குள் அப்பாடத்தையோ அல்லது பாடங்களையோ எதிர்கால ஆட்சேர்ப்புப் பரீட்சையில் தகுதிப் புள்ளியாகிய 33⅓ சதவீதம் புள்ளியைப் பெற்று சித்தியடையுமாறு வேண்டப்படுவர்."

பி. மகாதேவ,
அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உண்ணாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு,
டொறின்டன் சதுக்கம்,
கொழும்பு-7,
பெப்ருவரி 13, 1973.

3-4—02-03-73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

**ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் II ஆம் தர "அ" பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு அலுவலகமுறை, நடைமுறை, கணக்கு ஆகியவற்றில் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை.—ஆகஸ்ட் 1972**

1971.6.25 ஆம் திகதிய 764 ஆம் இலக்க பலமுகப்படுத்தப்பட்ட கூற்றின் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட ஆசுபத்திரி எழுதவினைஞர் சேவையின் பிரமாணக் குறிப்புகளின் பின்னிணைப்பு "ஈ" என்பதில் குறிப்பிடப்பட்டதும், 1972 ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி நடாத்தப்பட்டதுமான பரீட்சையில் ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் II ஆம் தர "அ" பிரிவிலுள்ள பரீட்சார்த்திகள் அவரவர் பெயருக்கு எதிராகக் குறிக்கப்பட்டுள்ள பாடங்களில் சித்தியடைந்துள்ளார்கள் எனப் பொது அறிவித்தலுக்காக இத்தால் அறியத் தரப்படுகிறது :—

| | பெயர் | பணிபுரியுமிடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | தொடம்கொடை, எஸ். | மாவட்ட வைத்தியசாலை, கொஸ்லந்தை | அலுவலகமுறையும் நடைமுறையும் |
| 2. | குருகே டி. எச். பி. | பெரியாஸ்பத்திரி, கொழும்பு | அலுவலகமுறையும், நடைமுறையும் |
| 3. | மெண்டிஸ், பி. டபிள்யூ. | மார்புநோய் வைத்திய சாலை, புத்தளம் | அலுவலகமுறையும், நடைமுறையும் |
| 4. | நந்தசேன, எம். பி. | ஆதார வைத்தியசாலை, நுவரெலியா | அலுவலகமுறையும், நடைமுறையும் |
| 5. | நடராஜா, ஏ. | மனநோய் வைத்தியசாலை, அங்கொடை | கணக்கு |
| 6. | பிரேமதாச, என். ஏ. | பெரியாசுபத்திரி, கொழும்பு | அலுவலகமுறையும், நடைமுறையும் |
| 7. | இராஜகோபாலன், எஸ். | மாவட்ட வைத்தியசாலை, பசறை | அலுவலகமுறையும், நடைமுறையும் |
| 8. | ரத்னசேகர, ஜே. எஸ். | மாவட்ட வைத்தியசாலை, எஹெறலியகொட | அலுவலகமுறையும், நடைமுறையும் |
| 9. | வடுதந்திரி, ஆர். டி. எஸ். | மாவட்ட வைத்தியசாலை, நிதிகம, நம்படகல | கணக்கு |
| 10. | வில்லியம், ஏ. | அரசாங்க வைத்தியசாலை, பலாங்கொடை | கணக்கு, அலுவலகமுறையும், நடைமுறையும் |

எஸ். அமரசேன,
பிரதி அதிபதி (நிருவாகம்),
சுகாதார சேவை அதிபதிக்காக.

சுகாதார சேவைகள் அதிபதி அலுவலகம்,
கொழும்பு, 1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 19 ந் உ.

3–86—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

### 01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

## "ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி (கெசற்)"

### வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11.00 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணியோடர் அல்லது போஸ்றல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக மைப் அடித்தல் பிழைகளையும், கால தாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்ரறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாசம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் :—

| குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. | 46 0 | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான கால வெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

#### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| சனவரி | 5.1.73 | வெள்ளி | 27.12.72 | புதன் | ந.ப. 12.00 |
| | 12.1.73 | வெள்ளி | 3.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.1.73 | வெள்ளி | 10.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 26.1.73 | வெள்ளி | 17.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| பெப்புருவரி | 2.2.73 | வெள்ளி | 24.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9.2.73 | வெள்ளி | 31.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 15.2.73 | வியாழன் | 7.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.2.73 | வெள்ளி | 14.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| மாச்சு | 2.3.73 | வெள்ளி | 21.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9.3.73 | வெள்ளி | 28.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 16.3.73 | வெள்ளி | 7.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.3.73 | வெள்ளி | 14.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 30.3.73 | வெள்ளி | 21.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| ஏப்பிறில் | 6.4.73 | வெள்ளி | 28.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் | 4.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் | 11.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி | 18.4.73 | புதன் | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
கொழும்பு,
1972 ம் ௵ ஒகஸ்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.